පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය -79

ආයතනයේ නම : දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - කුරුණෑගල

පාර්ලිමේන්තුවේ රාජ්‍ය ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் - 79

நிறுவனத்தின் பெயர் : மாவட்டச் செயலகம் - குருணாகல்

பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் நிறுவனத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புகள் மற்றும் அது தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series - 79

Name of the institution – Kurunegala

Submission of observations of the Hon. Minister in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the committee on public Accounts in terms of Standing Order No 119(4)

இலங்கை பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் தொடர்பான செயற்குழுவினால் முன்னிப்புச் செய்யப்பட்டுள்ள நிலையியற் கட்டளை 119(4) தொடர்பான அவதானங்கள் மற்றும் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

பாராளுமன்ற வெளியீட்டு இலக்கம் - 79

மாவட்டச் செயலகம் - குருணாகல்

அரச கணக்குகள் செயற்குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளும் வழிகாட்டல்களும்	கணக்களிக்கும் உத்தியோகத்தரினால் எடுக்கப்பட்ட செயற்பாடுகள் / தற்போதைய முன்னேற்றம்
முதலாம் பாகம்: 98.00	
01. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 ஆவது குறைந்தபட்சம் நடத்தாதிருத்தல்.	*2022 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டகள் 03 இனை பின்வரும் திகதிகளில் நடாத்தப்பட்டுள்ளது.* *முதல் காலாண்டில் - 2022.04.27* *மூன்றாம் காலாண்டில் - 2022.09.29* *நான்காம் காலாண்டில் - 2022.12.08* *இரண்டாவது காலாண்டுக்கான மாவட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் 2022.06.29 ஆந் திகதியன்று நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் செய்யப்பட்டிருந்தும், அக்காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியான சூழ்நிலை காரணமாக, அக்குழுக் கூட்டத்தை உடனடியாக இரத்துச் செய்ய ஏற்பட்டது. ஆனால் 02 ஆம் காலாண்டுக்கு உரித்தான குழுக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்களுடன் 2024.09.29 ஆந் திகதியன்று மூன்றாம் காலாண்டுக்கான மாவட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் உரிய வகையில் நடைபெற்றது.* *2023 ஆம் ஆண்டில், 04 குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதோடு, 2024 ஆம் ஆண்டுக்கு உரித்தான இரண்டாவது காலாண்டின் இறுதிக்குள், முதல் மற்றும் இரண்டாம் காலாண்டுகளுக்கு நடத்தப்பட வேண்டிய 02 மாவட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்களும் நடைபெற்றுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

அரச கணக்குகள் செயற்குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளும் வழிகாட்டல்களும்	கணக்களிக்கும் உத்தியோகத்தரினால் எடுக்கப்பட்ட செயற்பாடுகள் / தற்போதைய முன்னேற்றம்
இரண்டாம் பாகம்: 96.00	
01. மாதாந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்படாமை.	1. 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், மாதாந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்குரிய தினம் தொடர்பில் திட்டமிடல் மற்றும் அந்தத் திகதிகளை ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இணைத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டது. 2. அவ்வாண்டில் நாட்டில் நிலவிய அரசியல் போராட்டச் சூழல் காரணமாக அரசியல் பிரதிநிதிகளின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் இருப்பதன் காரணமாக கூட்டங்களில் பங்கேற்காமை, குருநாகல் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களின் இடமாற்றங்களை மேற்கொள்ளல், ஆண்டின் இறுதிக் காலாண்டில் அபிவிருத்தித் திட்டங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை போன்ற காரணங்களின் அடிப்படையில் வருட ஆரம்பத்தில் திட்டமிட்டபடி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடாத்த முடியாதுள்ளது. 3. 2022 ஆம் ஆண்டில் 03 மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் (2022.02.15, 2022.03.16 மற்றும் 2022.09.30) ஆந் திகதிகளில் மாத்திரம் நடைபெற்றுள்ளது. ஆனால் 2023 ஆம் ஆண்டில் 07 ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் (2023.03.03, 2023.05.17, 2023.06.28, 2023.07.26, 2023.09.26 மற்றும் 2023.12.27) ஆந் திகதிகளில் நடைபெற்றுள்ளது. 2023.10.10 ஆந் திகதியன்று நடைபெறவிருந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அரசியல் அதிகாரத்தின் வாய்மொழி அறிவிப்பின் பின்னர் நடைபெறவில்லை. 4. ஏற்கனவே 2024 ஆம் ஆண்டிற்காக, 05 ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை (2024.01.17, 2024.02.22, 2024.05.14, 2024.06.11 மற்றும் 2024.07.30) ஆந் திகதிகளில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அத்துடன், 2024.04.02 ஆந் திகதியன்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவை நடத்துவதற்கு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்த போதிலும், 2024.03.27 ஆந் திகதியன்று புத்தளம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளாமையினால் குருணாகல் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திற்கு உத்தியோகத்தர்களின் பங்கேற்பு நிச்சயமற்ற நிலையில்

அரச கணக்குகள் செயற்குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளும் வழிகாட்டல்களும்	கணக்களிக்கும் உத்தியோகத்தரினால் எடுக்கப்பட்ட செயற்பாடுகள் / தற்போதைய முன்னேற்றம்
	இருந்ததால் அக்கூட்டமும் நடைபெறவில்லை. 5. மாவட்டச் செயலாளர் ஒருவர் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் செயலாளராக மாவட்டச் செயலாளர் பணியாற்றி வருவதோடு, அதன் இணைத் தலைவர்களாக கௌரவ வடமேல் மாகாண ஆளுநர் மற்றும் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் செயற்படுகின்றார். மாதாந்தம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கான திகதிகள் அரசியல் அதிகாரத்தால் நிர்ணயிக்கப்படுவதால், அந்த நாட்களிலே கூட்டங்கள் நடத்தப்படுகிறன. இணைத் தலைவர்கள் போன்றே மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்காமல் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை நடத்த முடியாது என்பதால் மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுவை நடத்துவது சாத்தியமில்லை என்பதால் உரிய வகையில் மாதாந்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தை நடாத்த முடியவில்லை என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்
02. நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம் / கீழ்நிலை மட்டம் / மறுப்பு நிலை மட்டம் / பாதகமான நிலை மட்டம்.	
பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்கள் தவிர 2022 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு குருணாகல் மாவட்ட செயலகத்தின் நிதி நிலை மற்றும் அத்திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் படி உண்மையானதும் நியாயமானதும் என வெளிப்படுத்துவதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயமாக காட்டப்பட்டுள்ளது.	
2.1 மூலதனச் செலவுகள் *ACA-2(i) படிவத்தின்படி, மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்துவதற்கான செலவு ரூபா. 39,81,462 ஆக குறிப்பிடப்பட்டிருந்தும், திறைசேரி SA-82 படிவத்தின்படி, அச்செலவு ரூபா. 4,110,007 ஆக குறிப்பிடப்பட்டுள்ளதால் ரூபா. 128.545 ஆன தொகையில் வித்தியாசம் காணப்படுகின்றது.*	பொல்பித்திகம பிரதேச செயலகத்தின் கூரையை புனரமைப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா. 128,545.00 ஆன தொகை திறைசேரியின் அச்சிடப்பட்ட பிரதிகளின் ஆரம்ப நிலுவைத் தொகையாக சீரமைப்பக்கப்பட்டு திருத்தப்பட்டுள்ளதோடு, 2023 ஆம் ஆண்டின் இறுதியில் திணைக்களப் புத்தகங்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளது.

அரச கணக்குகள் செயற்குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளும் வழிகாட்டல்களும்	கணக்களிக்கும் உத்தியோகத்தரினால் எடுக்கப்பட்ட செயற்பாடுகள் / தற்போதைய முன்னேற்றம்
2.2. நிதி அல்லாத சொத்துக்கள் *(அ) குளியாப்பிட்டிய கிழக்கு, உடுபந்தாவ, மாஸ்பொத, மல்லவபிடிய, ரஸ்நாயகபுர மற்றும் கல்கமுவ ஆகிய 06 பிரதேச செயலகங்களும் அமைந்துள்ள காணிகளின் பெறுமதியை மதிப்பிட்டு சொத்துக்கள், இயந்திரப் பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்குப் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.*	*சுட்டிக்காட்டப்பட்டுள்ள குளியாபிட்டிய (கிழக்கு), உடுபந்தாவ, மாஸ்பொத, மல்லவபிடிய, ரஸ்நாயகபுர மற்றும் கல்கமுவ ஆகிய எல்லா பிரதேச செயலகங்களும் அமைந்துள்ள காணியின் பெறுமதியை மதிப்பீடு செய்து சொத்துக்கள், இயந்திரப் பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்குப் பதியப்பட்டுள்ளது.*
(ஆ) அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் காணப்படுகின்ற தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையத்தினால் 04 பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தண்ணீர் பவுஸருடன் கூடிய 04 லொரிகளை கையகப்படுத்தி மதிப்பீட்டு கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.	*அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் கீழ் காணப்படுகின்ற தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையத்தினால் வழங்கப்பட்டுள்ள தண்ணீர் பவுஸருடன் கூடிய 04 லொரிகளையும் எதிர்வரும் காலத்தில் பிரதேச சபைக்கு அனுப்புவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.* *மேலும், நீர் பவுஸர்களுடன் கூடிய இந்த லொறிகள் குருணாகல் மாவட்டச் செயலாளரின் பெயரில் கையகப்படுத்தப்பட்டால், அதற்கான அனைத்து பராமரிப்புச் செலவுகள் மற்றும் எரிபொருள் செலவுகள் அனைத்தும் 272 செலவுத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதால், மற்றும் அதற்கு மேலதிக ஒதுக்கீடுகள் எதுவும் கிடைக்கப்பெறாததன் காரணமாக கையப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.*
(இ) தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையத்தில் இருந்து மாவட்ட செயலகம் ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்த ட்ராக்டர் பவுஸர் டேலர் இயந்திரத்தை மாவட்ட செயலாளர்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததோடு, 19 பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த 25 ட்ராக்டர் பவுஸர் டேலர் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் 17 பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த 20 ட்ராக்டர் மற்றும் டேலர் இயந்திரங்கள் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்றாலும் அச்சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யது கணக்குப் பதியும்	*தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையம், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மூலம் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த எல்லா ட்ராக்டர் மற்றும் டேலர் இயந்திரங்களை கையகப்பட்டுத்தி கணக்குப் பதிவு செய்யும் நடவடிக்கை நிறைவடைந்துள்ளது.*

அரச கணக்குகள் செயற்குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளும் வழிகாட்டல்களும்	கணக்களிக்கும் உத்தியோகத்தரினால் எடுக்கப்பட்ட செயற்பாடுகள் / தற்போதைய முன்னேற்றம்
நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	
(ஈ) 2509 செலவுத் தலைப்பின் கீழ் "கிராமத்துடன் கலந்துரையாடல்" திட்டத்தின் மூலம் பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்ட கட்டிடங்கள், சேவா பியச / உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் பிற கட்டுமானங்கள் முறையாக கையகப்படுத்தி நிதி அல்லாத சொத்துகளின் கீழ் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	"கிராமத்துடன் கலந்துரையாடல்" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டிடங்கள், சேவா பியச / உத்தியோகபூர்வ இல்லங்கள் உள்ளிட்ட பிற கட்டிடங்கள் அனைத்தினதும் பெறுமதிகளை கணக்குப் பதியும் நடவடிக்கை நிறைவடைந்துள்ளது.
(உ) நாரம்மல பிரதேச செயலகத்துக்குச் சொந்தமான புத்தம் புதிய சகல வசதிகளுடன் கூடிய உத்தியோகபூர்வ இல்லம் ரூபா. 6,229,500 ஆன பெறுமதியென மதிப்பிடப்பட்டுள்ள போதும், அம்மதிப்பீடு கணக்குப் பதியப்படவில்லை.	பிரதேச செயலகத்துக்குச் சொந்தமாகக் காணப்படும் உத்தியோகபூர்வ இல்லத்தை மதிப்பீடு செய்து அதன் பெறுமதியை கட்டிடங்கள் மற்றும் கட்டுமானத்தின் கீழ் கணக்குப்பதியப்பட்டுள்ளது.
(ஊ) மீளாய்வு வருடத்தின் நிதி அல்லாத சொத்துக்களை கொள்வனவு செய்தல் திணைக்களப் புத்தகங்களின் படி ரூபா. 12,626,297 ஆன தொகையாக இருந்தாலும், அது நிதிக் கூற்றுக்களில் ரூபா. 11,539.037 ஆன தொகையாக காட்டப்பட்டுள்ளதன் காரணமாக ரூபா. 1,087,853 ஆன தொகை குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.	கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிதி அல்லாத சொத்துக்களைக் கொள்வனவு செய்யும் பெறுமதியில் திணைக்களத்தின் புத்தகத்தின் படி நிலுவை சரியானது என்பதோடு, திறைசேரி SA-82 படிவத்தின் படி திறைசேரியினால் திறைசேரி அச்சிடப்பட்ட பிரதிகளில் ஆரம்ப நிலுவையை கூட்டுவதன் கீழ் செம்மையாக்கப்பட்டுள்ளதால் வித்தியாசங்கள் ஏற்பட்டுள்ளன. எவ்வாறாயினும் ஆண்டின் இறுதியில் வாகனங்கள், கட்டிடங்கள் மற்றும் நிர்மாணப் பணிகள், இயந்திரங்கள் மற்றும் இயந்திராதிகள் என்பன நிதி அல்லாத சொத்துக்களின் திணைக்களப் புத்தகங்களின் படி இறுதி நிலுவைகள் திறைசேரியின் அச்சிடப்பட்ட பிரதிகளில் இறுதி நிலுவைகள் மற்றும் சீர்செய்யப்பட்டுள்ளதாக தயவுடன் அறியத்தருகிறேன். மேலும் மேற்படி வித்தியாசம் அனைத்தும் திறைசேரயின் அச்சிடப்பட்ட பிரதிகளில் சரிசெய்வதற்கு 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரச கணக்குகள் செயற்குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளும் வழிகாட்டல்களும்	கணக்களிக்கும் உத்தியோகத்தரினால் எடுக்கப்பட்ட செயற்பாடுகள் / தற்போதைய முன்னேற்றம்
(எ) மாவட்ட செயலகத்துக்கு உட்டப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள அறிக்கைகளின் படி, 34 உத்தியோகபூர்வ இல்லங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா. 97,575,925 ஆக இருந்தாலும், நிதிக் கூற்றுக்களின் படி அப்பெறுமதி ரூபா. 81,697,976 ஆன தொகையாக காட்டப்பட்டுள்ளதால் ரூபா. 15,877,949 ஆன பெறுமதி குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.	மாவட்ட செயலகத்துக்குச் சொந்தமான 34 உத்தியோகபூர்வ இல்லங்கள் மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்டுள்ள பெறுமதி ரூபா. 81,697,976 ஆகக் காணப்படுவதோடு அதனை சரியாக கணக்குப்பதியப்பட்டுள்ளது. அதனை கணக்காய்வில் எம்மால் வழங்கப்பட்டுள்ளதோடு, அதன் பெறுமதி ரூபா. 81,697,976 ஆன தொகை தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. ரூபா. 81,697,976 ஆன தொகையாக எம்மால் வழங்கப்பட்டுள்ள அறிக்கையின் படி கணக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள பெறுமதி சரியானது.
(ஏ) நிதிக் கூற்றின் படி நிதி அல்லாத சொத்துக்கள் கணக்கின் குடியிருக்காத கட்டிடங்கள் கணக்கில் மற்றும் இயந்திராதிகள் கணக்கில் 2021 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று நிலவுகின்ற இறுதி நிலுவைகள் 2022 ஜனவரி மாதம் 01 ஆந் திகதிக்கு ஆரம்ப நிலுவையில் ஒழுங்குமுறையே ரூபா. 3,106,940 ஆன தொகை அதிகமாகவும், ரூபா. 32,180 ஆன தொகை குறைவாகவும் பெறுமதியில் காட்டப்பட்டுள்ளது.	குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள் மற்றும் இயந்திராதிகளின் 2022 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட சேகரிப்புகள் திறைசேரியின் அச்சிடப்பட்ட பிரதிகளின் ஆரம்ப நிலுவைக்கு செம்மையாக்கம் செய்யப்பட்டுள்ளதால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வித்தியாசங்கள் ஏற்பட்டுள்ளன. எவ்வாறாயினும் ஆண்டிறுதியில் குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் இயந்திராதிகள் திணைக்களப் பதிவேடுகளின் படி இறுதி நிலுவைகள் திறைசேரியின் அச்சிடப்பட்ட பிரதிகளில் இறுதி நிலுவையுடன் இணங்கியுள்ளது.
2.3கணக்காய்விற்கான சான்றுகள் காணப்படாமை (அ) 06 பிரதேச செயலகங்களினால் நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டுள்ள 07 உத்தியோகபூர்வ இல்லங்கள் ரூபா. 23,780,480 ஆன தொகைக்கு மதிப்பிடப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தும், குறித்த பெறுமதிகள் நிதி நிலைக் கூற்றில் நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தப்படவில்லை என்பதோடு, அதற்கு உரித்தான அட்டவணைகளில் உள்ள நிலுவைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான தகவல்களும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 07 உத்தியோகபூர்வ இல்லங்களும் பிரதேச செயலகப் பிரிவின் வளாகத்தினுள் அமைந்துள்ளதோடு, கணக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலகக் காணி மற்றும் கட்டிடங்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதியினுள் இந்த உத்தியோகபூர்வ இல்லங்களின் பெறுமதி உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன்படி ரூபா. 23,780,480 ஆன தொகைக்கு மதிப்பட்டுள்ள 07 உத்தியோகபூர்வ இல்லங்களின் பெறுமதி நிதி நிலைக் கூற்றில் நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.
(ஆ) பிரதேச செயலக வளாகத்தினுள் அமைந்துள்ள 07 உத்தியோகபூர்வ இல்லங்களும் பிரதேச செயலாளரினால்	கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 07 உத்தியோகபூர்வ இல்லங்கள் பிரதேச செயலக வளாகத்தினுள் அமைந்துள்ளதோடு, அவற்றின் பெறுமதி

அரச கணக்குகள் செயற்குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளும் வழிகாட்டல்களும்	கணக்களிக்கும் உத்தியோகத்தரினால் எடுக்கப்பட்ட செயற்பாடுகள்/ தற்போதைய முன்னேற்றம்
பயன்படுத்தப்பட்டு வருவதோடு, இந்த உத்தியோகபூர்வ இல்லங்கள் மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு, அதற்குரிய அட்டவணைகளில் நிலுவைகளை உறுதிப்படுத்துவதற்கான தகவல்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது கணக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலக காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன்படி 07 உத்தியோகபூர்வ இல்லங்களினதும் பெறுமதிகள் நிதிக் கூற்றில் நிதி அல்லாத சொத்துக்களின் காட்டப்பட்டுள்ளது.

தலைமை கணக்காளர்
மாவட்ட செயலகம்
குருநாகல்

W.M.R.C. Kumari
Chief Accountant
District Secretariat
Kurunegala.

மாவட்ட செயலாளர்
மாவட்ட செயலகம்
குருநாகல்

R.M.R. Rathnayake
Government Agent/District Secretary
Kurunegala.

செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

Pradeep Yasarathna
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
(Home Affairs Division)
"NILA MEDURA" Elvitigala Mawatha, Colombo 05.

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்